RECEIVED

தமிழ்ச்சிட்டு

இழிந்தோரும், உயர்ந்தோரும்.

காக்கைக்கு 'வேம்பு' இனிக்கும்;
கழுதைக்குத் 'தாள்' இனிக்கும்;
கழிவு, குப்பை,
ஈக்களுக்கோ மிக இனிப்பாம்!
இழிந்தவர்கள் இவை போல்வார்.
எனினும், வண்ணப்

பூக்களிலே தேனெடுக்கப்
போகின்ற தேனீப்போல்
பொறிவண் டைப்போல்
ஊக்கமொடு நல்லனவே
உவந்து, உண்டு மகிழ்ந்திடுவர்
உயர்ந்தோர் தாமே!



தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

2 இதழ்: 4 — 15



உங்கள் மடல்கள்

O 'இன்றைய சிறுவர் நாளைய உலகம்' என்பதை விழுமியோராக 'நடிக்கும்' பலரும்-பணமுதலைகள், பேர் இதழ் நடத்தும் வாய்ப்பு-நலன்கள் (Facilties) பெற்றோர் பலரும் உணரத் தலைப்படாத வேளையில் தாங்கள் முனைந்து இளஞ் செல்வங்களைத் 'தமிழ்ச் சிட்டு'களாக மாற்ற உழைக்கும் அருஞ் செயல் கண்டு இறும்பூதெய்துகிறேன். 'தமிழ்ச் சிட்டு' சிறுவர் கலை இதழ் மட்டுமன்று; பட்டம் பெறும் இன்றையக் கல்லூரி மாணவர்களின் அறிவுக்கு இதுவரை புலனாகாச் செய்திகளைத் தாங்கி வந்து அவர்களின் அறிவு நலனுக்கும் இவ்வோடு உறுதுணை புரிகின்றது. எனவே இஃது இளைஞர் கலை இதழ். தமிழ் ஆர்வமுள்ள இளைஞர், உலகின் எப்பகுதியிலிருந்தாலும் அவர்கள் தவறாது படித்துப் பயன்பெற வேண்டிய இதழ் இது! தமிழ்ச் சிட்டே! பறந்து செல்; பண் பாடு; இதோ என் உறுப்பினர் கட்டணம்!

-பூதலூர்.முத்து. காந்தியடிகள் இல்லம், பூதலூர் (தஞ்சை).

O அறிவுக்கும், ஆற்றலுக்கும் அரிய விருந்துதரும் தமிழ்ச்சிட்டுக்கு என் வாழ்த்து. இச்சிறு பொழுதிலேயே எனக்குத் தமிழில் ஆர்வமும் ஈடுபாடும் நிறைய ஏற்பட்டுள்ளன. இதற்கு உங்கள் இதழ்களே காரணம். மேலும் என் ஆசிரியப் பெருந்தகை திரு.ஏகாம்பரம் க.இ ஆ.ப. அவர்களின் மேன்மை பொருந்திய உள்ளத்தால் நான் " தமிழ்ச்சிட்டு" படிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அவர்களுக்கு என் உள்ளங்கனிந்த நன்றியறிதலைச் தெரிவித்துக் கொள்கிறேன்.

-கூகூர் ந. இராசேந்திரன். 10ஆம்நிலை. அ. உ. பள்ளி. இலால்குடி

O எங்களை யெல்லாம் துள்ளிக் குதித்துப் பள்ளி செல்ல வைத்த பார் போற்றும் பைந்தமிழ்ச் சிட்டே! உன்னை நாங்கள் நினைக்காத நேரமில்லை! உன் அருங் கருத்துகளை எங்கள் உள்ளமாகிய பொற் பேழையில் வைத்துப் பூட்டி வைக்கின்றோம். நின் குரல் உலகம் முழுவதும் ஒலிக்க வேண்டும் என்பது எங்களின் அடங்கா ஆவல்.

–கதிரொளி, பரிவில்லிக்கோட்டை, கோவில்பட்டி.

O தமிழ்மேல் ஆர்வமில்லாதவர்களையும் தங்களின் தென்மொழியும், தமிழ்ச்சிட்டும் ஆவலைத் தூண்டித் தமிழுக்காக எதையும் செய்யும் உள்ளமுடையவர்களாக மாற்றுகின்றது. அதற்காகத் தமிழ்க் கல்லூரியில் பயிலும் நான் உங்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றேன்.

-இரா. இராசேந்திரபாபு, 2-ஆம் ஆண்டு
செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

O தங்கள் இதழ்களான தென்மொழியும், தமிழ்ச்சிட்டும் இவ் வளமார் தமிழகத்துச் சிறகசைத்துப். பெருமளவில் பரவவில்லையே எனப் பெரிதும் வருந்துகின்றேன். இத்தமிழகத்துள்ளோர் இவற்றைப் படித்திலர்; இவற்றின் சுவையை உணர்திலரெனின் அவர் தமிழரேயல்லர்; தம் விழி போக்கியவரே! இங்குள்ள சில்லோரிடமும் எம் மாணவரிடமும் 'தமிழ்ச் சிட்டு'தனைப் படிக்கத் தூண்டியுள்ளோம்; தூண்டுகின்றோம்; தூண்டுவோம்.

-சேயிளங்கண்ணன், சரசுவதி தொடக்கப்பள்ளி.அமரப்பூண்டி; பழனி.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–2 | தி. பி. ௧௯௯௮ கார்த்திகை (நளி) நவம்பர் 67 | இசை–4

இருவகை முயற்சி.

குழந்தைகளே! உலகில் எப்பொழுதும் இரண்டுவகையான முயற்சிகள் உள என்று அறிஞர் கூறுகின்றனர். ஒன்று அறிவு முயற்சி; இன்னொன்று செல்வமுயற்சி. அந்த இரண்டுவகை யான முயற்சிகளாலும் கிடைக்கும் பயன்களும் இரண்டுவகை யானவையே! இவ்வாறு முயற்சிகளும், அவற்றின் பயன்களும் இரண்டாகப்போகவே, அவற்றுக்குரிய மக்களும் இரண்டுவகை யினராகவே பிரிக்கப்படுகின்றனர். ஒருவகையான மக்கள் அறிவு முயற்சி செய்துகொண்டிருப்பர். இன்னொருவகையான மக்கள் செல்வமுயற்சி செய்துகொண்டிருப்பர். இவ்வுண்மை,

“ இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு;
தெள்ளியர் ஆதலும் வேறு ”

என்ற திருக்குறளில் சொல்லப்படுகின்றது. இதில் ‘திரு’ என்ற சொல் செல்வரையும், ‘தெள்ளியர்’ என்பது அறிவுடையோரையும் குறிக்கும்.

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.

“செல்வம் எப்பொழுதும் முயற்சி உடையவர்க்குத்தான் கிடைக்கும். முயற்சியில்லாதவர் கைகளிலும் சில வேளைகளில் செல்வம் கிடைக்கும். அது நடு ஊரில் நச்சுமரம் பழுத்ததுபோல் ஆகும். நச்சு மரத்தை எவரேனும் விதையிட்டு, நீர் பாய்ச்சியா வளரச் செய்வர்? மாட்டார்; அதுபோல் கீழ்மக்களிடம் செல்வம் முயற்சியில்லாமலோ, தீய வழிகளிலோ வரலாம். அது செல்வமும் ஆகாது; அஃதை உடையவர் செல்வருமாகார். அச்செல்வம் அவர்களுக்கும் பயன்படாது. அவர்கள் நிலத்துக்குச் சுமை; பிணத்துக்குச் சமம்” என்றெல்லாம் முயற்சியில்லாத கயவர் கைகளில் கிடைக்கும் செல்வத்தைப்பற்றி வள்ளுவர் சொல்கிறார். முயற்சியில்லாதவர் கைகளிலும் அறமல்லாதவர் கைகளிலும் கிடைக்கும் செல்வம், முயற்சியுடையவர் கைகளுக்கும் அறவோர் கைக்கும் வரும்போது அது வெறும் ‘செல்வம்’ என்ற பெயரோடு வருவது இல்லை; ‘திரு’ என்ற பெயரோடு வருகின்றது என்பது வள்ளுவர் கருத்து.

சிறுவர்களே! அறவழியிலேதான் செல்வத்தை ஈட்டவேண்டும். அதற்குப் பெரிய முயற்சிவேண்டும். அதுபோலவே அறவழியில்தான் அறிவும் பெறவேண்டும். அதற்கும் மிகுந்த முயற்சிவேண்டும். செல்வம் தவறானவழியில் எளிதாகத் திரட்டப்படுவதுபோலவே, அறிவும் தவறானவழியில் மிக எளிதாகவும் பெறப்படும். செல்வத்தைத் திருடியும், பிறரை ஏமாற்றியும் சேர்க்கலாம் இல்லையா? ஆனால் அஃது அறவழியில் வந்த செல்வம் ஆகுமா? ஆகாது அதுபோலவே தவறான வழிகளிலும் அறிவு பெறலாம்; சீட்டாட்டம், குதிரைப்பந்தயம் ஆடக்கற்பதும் திருடக் கற்பதும் ஒருவகை அறிவுதானே! ஆனால் அவற்றையெல்லாம் அறிவு என்று கற்கலாமா? அப்படிப்பட்ட அறிவு ஒருவேளை ‘அறிவு’ என்று சொல்லப்படலாம். ஆனால் தெள்ளிய-அறிவு தெளிந்த அறிவு ஆகாது என்பார் வள்ளுவர். தண்ணீர் என்று சொன்னவுடனேயே சேற்றில் தங்கியிருப்பதும் தண்ணீர்தானே என்றால் என்னசெய்வது ,அதனால்தான் ‘தெளிந்த’ தண்ணீர் என்பதுபோல் ‘தெளிந்த அறிவு’ என்று கூறவேண்டியதாயிற்று,

எனவே செல்வம் எப்படி அறவழியில் ஈட்டப்படவேண்டுமோ அப்படியே அறிவும் அறவழியில்தான் ஈட்டப்படவேண்டும். இன்னொருவரை அழித்தோ, ஏமாற்றியோ நாம் செல்வத்தைப்

தமிழ்க் கும்மி.

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி—இளங்
கோதையரே கும்மி கொட்டுங்கடி—புவி
எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்
எட்டிடவே கும்மி கொட்டுங்கடி!

வையம் பிறந்த முது மொழியாம்—இங்கு
வாழ்பவர்க் கெல்லாம் அது விழியாம்—உயர்
மெய்யில் விளைந்த உயிர்க் கலையாம்; அருள்
மேன்மை பழுத்த பழக் குலையாம்!

பெறக்கூடாது. அதுபோல் இன்னொருவரை ஏமாற்றவோ, அழிக்கவோ நம் அறிவு பயன்படக்கூடாது. அப்பொழுதுதான் அவை 'திரு' வென்றும், 'தெள்ளிய அறிவு' என்றும் கூறப் பெறும்.

குழந்தைகளே! இனி, அறவழியில் ஈட்டிய செல்வம் நடு ஊரில் வளர்ந்த மருந்து மரம்போலவும், நல்லநீர்க் கிணறு போலவும் எப்படி எல்லாருக்கும் பயன்படவேண்டுமோ, அப்படியே அறவழியில் பெற்ற அறிவும் எல்லாருக்கும் பயன்பட வேண்டும். செல்வத்தைப் பெற்றுப் பிறர்க்கும் ஈந்து வாழாதானை நச்சுமரம், பிணம், நிலத்துக்குச்சுமை என்று நாம் சொல்கிறோம் இல்லையா? அதுபோலவே நல்ல அறிவைப்பெற்று, அதனைப் பலருக்கும் பயன்படாதபடி வைத்திருப்பவனும், அல்லது தனக்கே பயன்படும்படும்படி வைத்திருப்பவனும் நச்சுமரம்; பிணம்; நிலத்துக்குச் சுமை என்றும் சொல்லப்படுவான். பிறர்க்குப் பயன் தராமல் செல்வத்தைச் சேர்ப்பவனை எப்படித் திருடன் என்கின்றோமோ அப்படியே பிறர்க்குப் பயன்படாமல் அறிவைத்திரட்டி வைத்திருப்பவனும் அறிவுத்திருடன் ஆவான்.

எனவே, இவ்வுலகில் இரண்டு முயற்சிகள் நடைபெறுகின்றன. ஒன்று 'திரு' படைத்தவராகவோ, அல்லது வெறும் செல்வம் உடையவராகவோ ஆகும் முயற்சி. இரண்டு, 'தெளிந்த அறிவுடையோர்' ஆகவோ அல்லது "வெறும் அறிவுடையோர்" ஆகவோ ஆகும் முயற்சி. இவற்றில் நீங்கள் விரும்பும் முயற்சி எது? ஏன்?

—பெருஞ்சித்திரன்

ஊழி பலநூறு கண்டதுவாம்—அறி
வூற்றெனும் நூல் பல கொண்டதுவாம்-பெரும்
ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்
அழியாமலே நிலை நின்றதுவாம்!

பாண்டியன் வேல்கொண்டு காத்ததடி-உயர்
பாவியம் பற்பல பூத்ததடி—கடல்
தாண்டி மரக்கலம் ஏறி உலகெலாம்
தாவிப் பறந்தெழில் சேர்த்ததடி!

பாருக்கெல்லாம் அறம் சொன்னதடி—உயர்
பாவலர் பாச்சோறு தின்னதடி—உயிர்
வேருக்குள் நல்லறம் வார்த்ததடி; பல
வேந்தர்கள் தம் அவை பார்த்ததடி!

ஆன்ற மொழியில் தனித்ததுவாம்—உயர்
ஆங்கிலர்க்கும் நன் கினித்ததுவாம்! – மண்
தோன்றி வளர்ந்த உயிரினத்தின் வெற்றி
தோல்வியை எண்ணிக் கணித்ததுவாம்!

கழகம் வளர்த்தநற் செல்வியடி—தொல்
காப்பியர் ஊட்டிய கல்வியடி! – அறம்
பழகுசெந் நாப்புல வோர்பலர் பேணியே
பாங்குறக் காத்த புதல்வியடி!

வள்ளுவரின் அறப் பால்குடித்தாள்—ஒலி
வார்க்கும் சிலம்பிணைக் காலணிந்தாள்—எழில்
துள்ளுந் தமிழ்மணி மேகலையை மின்னல்
தோன்றிடும் தன்னிடை நூலணிந்தாள்!

மண்டலப் பேரர சாண்டவளாம்—இந்த
மண்ணெலாந் தம்புகழ் நீண்டவளாம்-சுடர்க்
குண்டலச் செவியினள்! வளையொலி கையினள்!
கூத்திசை நல்லியல் பூண்டவளாம்!

சொல்லுக்குச் சொல் வெல்லக் கட்டியடி – அதில்
தோய்ந்திடும் நூல்கள்தேன் தொட்டியடி! – பொருள்
வெல்லப் பயின்றவர் தம்மினுக்கே, அதில்
வீறும் அறிவுபொன் பெட்டியடி!

பொய்யகற்றும்; உள்ளப் பூட்டறுக்கும்-அன்பு
பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும்-உயிர்
மெய்புகட்டும்; அற மேன்மைகிட்டும்; இந்த
மேதினி வாழ்வழி காட்டிருக்கும்!

கன்னியரே! கும்மி கொட்டுங்கடி-இது
கன்னித் தமிழ் எனக் கொட்டுங்கடி!-புவி
முன்னர் பிறந்ததும் பின்னர் சிறப்பதும்
முத்தமிழே என்று கொட்டுங்கடி!

சேயிழையீர்! கும்மி கொட்டுங்கடி–இது
செந்தமிழே எனக் கொட்டுங்கடி-நறும்
பாயிழை யோடுஞ்சொல் பல்கோடி கொண்டது
பைந்தமிழே எனக் கொட்டுங்கடி!

ஏந்திழையீர்! கும்மி கொட்டுங்கடி – என்றும்
இருந்தமிழே எனக் கொட்டுங்கடி; – உல
கேந்துபண் பாட்டினை ஏற்பதும் சேர்ப்பதும்
இளந்தமிழே என்று கொட்டுங்கடி!

கயல்விழியீர்! கும்மி கொட்டுங்கடி! – உயிர்
காந்தத் தமிழ் என்று கொட்டுங்கடி! - நெஞ்ச
மயலறுத்தே புவி மலர்த்துவ தெங்கள்
மணித்தமிழே என்று கொட்டுங்கடி!

தாழ்குழலீர்! கும்மி கொட்டுங்கடி - இது
தனித்தமிழே எனக் கொட்டுங்கடி! - மாந்த
வாழ்வழி முற்றும் வகைபடக் கூறுதல்
வளர்தமிழே எனக் கொட்டுங்கடி!

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி - தமிழ்க்
கோதையரே கும்மி கொட்டுங்கடி! - புவி
எட்டுத் திசையிலும் செந்தமிழின் சுடர்
ஏற்றிடவே கும்மி கொட்டுங்கடி!

துரை-மாணிக்கம்

விடுதலை மறவன் சோசப் கரிபால்டி

—உதயை. மு. வீரையன்

செந்தமிழ்ச் சிட்டுகளே!

"எங்கெங்கெல்லாம் அடிமைப் பட்டவர்கள் தம்மை அடிமைப் படுத்தினவர்களை எதிர்த்துப் போரிடுகின்றார்களோ, எங்கெங்கெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களின் அவலக்-குரலுடன் கூடி விடுதலை முரசொலி கேட்கின்றதோ அங்கெல்லாம் நான் விடுதலைக் கொடியை உயர்த்தி இருப்பேன்" என்று எந்நேரமும் தாம் போகுமிடமெல்லாம் பறை சாற்றிக் கொண்டிருந்த ஒரு விடுதலை மறவனை உங்களுக்குத் தெரியுமா? அவன்தான் சோசப் கரிபால்டி!

நம் விடுதலை மறவர் அக்காலத்தில் இத்தாலி நாட்டுக்குச் சொந்தமாயிருந்த நைசு (Nice) என்ற ஊரில் 1807-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 4-ஆம் நாள் தொமினிக் கரிபால்டி என்பவருக்கும், உரோசா இரெய்மாண்டி என்னும் அம்மையாருக்கும் பிறந்தார்.

இவர் தந்தை ஓர் ஏழைக் கப்பலோட்டி. எனவே, தன் மகனாவது கல்வி கற்று உயர எண்ணிப் பள்ளிக்கு அனுப்பினார். ஆனால் அவருக்குப் பள்ளிப் படிப்பில் விருப்பமில்லை. ஆயினும் அவர் பேதை அல்லர். சிறு வயதிலேயே புரட்சி எழுத்தாளன் வால்டேர், இத்தாலியப் பாவலன் இயூகோ பாசுகோலோ ஆகியோர் நூல்களை நாள் முழுவதும் ஒலிவ் மரத்தடியில் அமர்ந்து படித்துக் கொண்டிருப்பார்.

இதனால் இவர் தந்தை இவரைக் கப்பலில் பணியாளனாக அமர்த்தினார். ஆனால் பத்தாண்டுகளில் இவர் ஒரு கப்பலுக்கே தலைவரானார்!

ஒரு முறை இவர் உரோமாபுரிக்குச் சென்றிருந்தபோது அந் நகரின் அழிந்த கட்டடங்களும், சிதைந்த கலையுருவும், புதையுண்ட நாகரிகமும் இத்தாலி நாட்டின் பண்டையப் பெருமையை இளைஞர் கரிபால்டியின் அகக்கண்முன் கொண்டு வந்து நிறுத்தின. அந்த அவலக்காட்சி அவரது பிள்ளை உள்ளத்தில் ஒரு கீறலை உண்டாக்கி நாளடைவில் நாட்டுப் பற்று என்னும் தடுக்க முடியாத பேரூற்றாகப் பீறிட்டது.

அன்றைய இத்தாலி பல பிரிவுகளாக்கப் பட்டு, பல மன்னர் களால் அடக்கி ஆளப்பட்டதால் 'கடும்புலி வாழும் காடாக' இருந்தது. அந்தக் கொடுங்கோலர்களிடமிருந்து நாட்டை மீட்கத் திட்டம் வகுத்த மாசினி, கவூர் ஆகியோர் பலமுறை தண்டிக்கப் பட்டனர். மாசினி நாடு கடத்தப் பட்டார்.

இந்நிலையில் 1883-ஆம் ஆண்டு கரிபால்டி கப்பலில் வணிகப் பொருட்களை ஏற்றிக் கொண்டு மார்சேல்சு சென்றிருந்தார். அங்கே தம் தாய் நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்ட மாசினி இருப்பதாக அறிந்து அவரைக் காணச் சென்றார். கண்டார்; பேசினார்; ஒன்றினார். மாசினியின் 'இள இத்தாலி' இயக்கத்தில் உறுப்பினரானார்.

தம் மக்கள் மானமிழந்த நிலைக்கு வெட்கித் தாய் நாட்டின் விடு தலைக்குத் துடித்துக் கொண்டிருந்த போது இத்தாலி உள் நாடுகளில் ஒன்றான சவாய் (Savoi) நாட்டில் அந்நாட்டு மன்னர்க்கு எதிராக உள்நாட்டுப் போர் எழுந்தது.

குடிகளுக்கு ஆதரவாக மாசினியும், கரிபால்டியும் கொண்டு சென்ற படையெடுப்பு முறிந்தது. தோல்வியால் மாசினி சுவிட்சர் லாந்திலும், கரிபால்டி குடியானவன் உடையில் பிரான்சிலும் புகுந் தனர். கரிபால்டி மீது சவாய் அரசு கொலைத்தண்டனை பறை சாற்றியது.

கரிபால்டி பின்னர் தென் அமெரிக்கா அடைந்தார். அங்கு படையெடுத்த பிரேசிலுக்கு எதிராகப் படை திரட்டி நிகழ்த்திய துணிவு மிக்கச் செயல்கள் பலப்பல! ஒருமுறை 'இலகுனா' நகரைச் சூறையிட்டபோது 'அனிதா' என்ற மறக்குல மகளை மனைவியாகப் பெற்றார்.

கரிபால்டி தென் அமெரிக்காவில் ஆற்றிய மறச் செயல்களைப் பாராட்டி இலண்டனிலிருந்து மாசினி செய்தித் தாள்களில் எழுதினார்; இதனால் அவர் புகழ் இத்தாலி முழுவதும் பரவியது; இளைஞர்களும் விழித்தெழுந்தனர்; விடுதலை விரும்பினர்.

அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க 1848-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தம் சொந்த ஊர் துறைமுகம் வந்து இறங்கினார். மக்கள் படையுடன் சேர்ந்து மன்னரை எதிர்த்து உரோம் நகரை மூன்று மாதம் முற்றுகை யிட்டார். எனினும் பின் வாங்கும் நிலை தோன்றியது!

ஒரு நாள் நள்ளிரவு மக்களைப் பிரிந்து மனைவியுடனும், சில மறவர்களுடனும் உரோமை விட்டு வெளியேறினார். எதிரிப் படைகளால் துரத்தப்பட்டுப் பனியாலும், குளிராலும், பசியாலும், நடையாலும் மனைவி 'அனிதா' நோய்வாய்ப்பட்டு மாண்டாள்; மாண்டவளைப் புதைக்கவும், கல்லறையில் இட்டுக் கடைசிக் கண்ணீர் சிந்தவும் கூட அவருக்கு நேரமில்லை; பகைவரின் குதிரைக் குளம்பொலி கேட்டு அவளைப் புதைத்து விடுமாறு ஒரு குடியானவனிடம் தன் அருமை மனைவியின் பிணத்தைக் கொடுத்து விட்டு ஓடி ஒளிந்தார்.

பின் தென் அமெரிக்கா அடைந்தார்; மீண்டும் கேப்ரீரா தீவிற்குச் சென்று பண்ணை வேலையில் ஈடுபட்டார். அந்த நேரத்தில் சிசிலி நாட்டு விடுதலைப் போரில் தலைமை தாங்க அவருக்கு அழைப்புக் கிடைத்தது; படை திரண்டது; இறுதியில் மன்னர் ஆட்சி வீழ்ந்தது; மக்களாட்சி மலர்ந்தது!

நாட்டை எம்மானுவேல் என்பவரிடம் தந்து விட்டு,கேப்ரீராவுக்கு மீண்டும் வந்து தன் மக்களைப் பேணத் தொடங்கினார். இத்தாலியக் குடியரசு தர முன் வந்த அன்பளிப்புப் பெருந்தொகையையும், ஆண்டு உதவித் தொகையையும் உதறி எறிந்தார்.

தம் கைகளையே துணையாகக் கொண்டு வயல்களில் உழைத்து வந்த கரிபால்டி 1882-ஆம் ஆண்டு சூன் திங்கள் இரண்டாம் நாள் மாலை மறைந்தார். ஆனால் அவரது புகழ்மேடு மறையவில்லை; குறையவில்லை. நீங்காத வரலாற்றில் நிலைத்துவிட்டது.

வருங்கால மறவர்களே! நீங்களும் வரலாற்றில் நிற்க வேண்டாவா? முயலுங்கள்!

தெரிந்து கொள்ளுங்கள்

O மிக நெருங்கிய விண் மீன்களுக்கு இடையில் உள்ள தொலைவு 2,50,000 கற்கள்.

O மிக அருகில் உள்ள விண் மீனைத் தொட மணிக்கு 700 கற்கள் விரைவில் சென்றால் 10,00,000 ஆண்டுகள் ஆகும்.

O உயிரினங்களில் மிகுதியான நாள் இருக்கக்கூடியது 'திமிங்கலம்' ஏறத்தாழ 300 ஆண்டுகள் உயிர் வாழும்.

O குருதி அணு ஒன்று நெஞ்சாங்குலையிலிருந்து புறப்பட்டு, உடம்பில் ஒரு சுற்றுச் சுற்றி விட்டு வர 45 நொடிகள் ஆகின்றன.

O தரையில் ஒரு கல் தொலைவு என்பது 5280 அடிகள். ஆனால் கடலில் 6080 அடிகளாகும். கடலில் கணக்கிடப் படும் கல் நாட்டிகல் எனப்படும்.

O கொசு ஒரு நிமையத்தில் 11,400 முறை தன் இறகுகளை அடித்துக் கொள்கிறது,

O பறவைகளில் மிகுதியான நாள் உயிர் வாழ்வது ஆந்தை அகவை 90.

0 கரப்பான் பூச்சியால் 25 நாட்கள் சாப்பிடாமல் உயிர் வாழ முடியும்.

O உலகிலேயே மிகக் குறைந்த எழுத்துகள் உள்ள மொழி 'அவாய்' மொழிதான். அதற்கு மொத்தமே 12 எழுத்துகள்தாம்'

O அரசித்தேனீ ஒரு நாளைக்கு 200 முட்டைகள் இடுகின்றது.

O நம் உணவுப் பாதையின் நீளம் 25 அடி. சிறு குடலின் நீளம் மட்டும் 20 அடி. உணவுக் குழலின் நீளம் 10 விரற்கடை.

O குருவி ஒரு நொடியில் 12 முறை தன் சிறகுகளை அடித்துக் கொள்கிறது. அதன் விரைவு மணிக்கு 40 கற்கள்.

0 தவளையின் வாயை நெடுநேரம் திறந்து வைத்திருந்தால் அஃது இறந்து விடும்.

0 உலகிலேயே ஏசுவைப் பற்றித்தான் மிகுதியான நூல்கள் வெளி வந்துள்ளன. எண்ணிக்கை 5152. அடுத்ததாக சேக்சுபியரைப் பற்றி 3172 நூல்களும், ஆபிரகாம் இலிங்கனைப் பற்றி 2319 நூல் களும் வெளியாகி யுள்ளன.

0 நம் மூளையில் 10 இலக்கக் கோடி கண்ணறைகள்(Cells) உள்ளன.

0 பாம்பின் விரைவு மணிக்கு 3கல். அஃது உயிர் வாழும் காலம் 12 முதல் 20 ஆண்டுகள்.

0 நாம் எழுதுகின்ற கரிக்கோலை (Pencil)க் கொண்டு 38 கற்கள் நீளமுள்ள கோடு வரைய முடியுமாம்

0 உடலில் மிக விரைவாய் அசைவன பேசுவதற்கு உதவும் தசை களே ஆகும்.

0 மண் புழுக்களுக்குப் 10 நெஞ்சாங்குலைகள் உள்ளன. இவற்றிற் குக் கண், செவி, மூக்கு முதலியன இல்லை. மூளை முதுகில் இருக் கிறது. இவற்றில் ஆண், பெண் என்ற வேறுபாடுகள் இல்லை.

0 பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம் ஆண்டுக்கு ¼ விரற் கடை (கால் அங்குலம்) சாய்கிறதாம். இப்படியே சாய்ந்து கொண்டிருக்கு மானால் அ∴து இன்னும் 2,250 ஆண்டுகளில் வீழ்ந்து விடுமாம்.

0 தமிழக அரசினர் போக்கு வரத்து வண்டிகளின் மூலம் நாளொன் றுக்கு ஏறத்தாழ 1,06,700 உருபா வருவாய் வருகின்றது.

0 அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உணவுப் பொருள் களில் ஆண்டுதோறும் ஒரு விழுக்காடு வீணாகப் போகின்றது. அதன் அளவு 90,000 கல்லெடை (Ton) களாகும்.

0 தென்னிந்தியாவில் தமிழகம், கேரளம், மைசூர், ஆந்திரம், ஆகிய நான்கு மாநிலங்களில் நடக்கும் திருமணங்களில் மட்டும் மணமக்களை வாழ்த்துவதற்குச் செலவிடப் படும் மஞ்சள் கலந்த அரிசி ஆண்டுக்கு ஏறத்தாழ 11 கல்லெடை (Ton) ஆகும்.

0 நம் நாட்டின் நடுவணரசு தன் அன்றுட அலுவல் அமைப்புகளுக்காக மட்டும் செலவிடும் தொகை ஆண்டுக்கு 124 கோடி உருபா ஆகும்.

தொகுத்தவர்:– இரா.வ.சனார்த்தனம், பள்ளிநேலியனூர்.

தொடர்-5.



பிழையின்றி எழுதுங்கள் பேசுங்கள்

-புலவர். தி. நா. அறிவுஒளி-

குளம்பு-விலங்கின் அடி
குழம்பு-காய்கறிக் குழம்பு, சேறு
குளி-முழுகு
குழி-கிடங்கு, பள்ளம்
கூளம்-குப்பை
கூழம்-எள்
கூளி-பேய்
கூழி-குள்ளப்பசு
கேள்-செவி கொடு, நட்பு
கேழ்-நிறம்,பொருந்து, ஒளி
கேழ்வு-தோணிக் கூலி
கொளு-பொருந்து கருத்துத் தொடர்
கொழு-ஏர்க்காறு,கொழுப்பாகு
கொளுந்து-எரி
கொழுந்து-இளஇலை
கோளி-கொள்பவள்,ஆல், அத்தி
கோழி-ஒரு பறவை
சுளி-முகங்கோணு, சினங்கொள்
சுழி-வளை,வட்டமிடு, நீர்ச்சுழி
சூள்-ஆணை
சூழ்-ஆராய்,முற்றுகை இடு
சோளம்-ஒருவகைக் கூலம்
சோழம்-ஒரு நாடு
தாளம்-இசைக்கால அளவு
தாழம்-தாழ்வு
தாளி-பனை
தாள்-கால்,முயற்சி, அடித்தண்டு
தாழ்-கீழாகு, கதவடைகோல், பணி
தெளி-தெளிவாகு,சிதறு
தெழி-அதட்டு,வருத்து
தோளன்-தோளுடையவன்
தோழன்-நண்பன்
பளு-சுமை
பழு-முதிர்,கனி
பீளை-கண் அழுக்கு
பீழை-துன்பம்,புழுங்குதல்
பூளை-இலவம்பஞ்சு
பூழை-சிறுவாயில், துளை
பொளி-கொத்து
பொழி-ஊற்று,சொரி
முளவு-முள்ளம்பன்றி
முழவு-மத்தளம்
முளை-தோன்று,விதைமுளை
முழை-கை
மூளை-மண்டை உள்ளீடு
மூழை-அகப்பை,துடுப்பு
வளி-காற்று
வழி-நிரம்பிவழி,பாதை
வளை-வட்டமாக்கு,எலிவளை
வழை-சுரபுன்னை
வாளி-அம்பு, வளையம்

வாழி–வாழ்க
வாளை–ஒருமீன்
வாழை–ஒருமரம்
வாள்–கத்தி,ஒளி
வாழ்–உயிரோடிரு
விளா–ஒருமரம்
விழா–கொண்டாட்டம்
விளி–கூப்பிடு
விழி–கண் திற,பார்
விளை-வளர்,முதிர், உண்டுபண்ணு
விழை–விரும்பு
வேளம்–சிறைக்கூடம்
வேழம்–கரும்பு,யானை,மூங்கில்.

குறள் என்பதைக் 'குரல்' என்று எழுதினுல் எவ்வளவு தவறு! 'திருவல்லுவர்' என்றெழுதலாமா? 'திருவள்ளுவர்' என்றெழுத வேண்டும்.

நாம் எழுதியபின் அதை மீண்டும் கவனித்துப் படித்துத் தவறு களைத் திருத்தவேண்டும்.

சிறு தொடர்களாக எழுதுவது நல்லது. நீண்ட தொடர் பொருட் பிழை நேரக் காரணமாகும்.

வல்லின எழுத்து மிகும்இடம்:

ஒரு தொடரில் ஒரு சொல்லோடு இன்னொரு சொல் சேரும். முதலில் இருக்கும் சொல் 'நிலைமொழி' என்றும், அச்சொல்லோடு சேர வரும் சொல் 'வருமொழி' என்றும் கூறுவர்.

வருமொழியின் முதலெழுத்து வல்லின எழுத்துகளைக்(க,ச,த,ப) கொண்டிருந்தால், அச்சொல் நிலைமொழியோடு புணரும் போது அச்-சொல்லில் உள்ள வல்லின மெய்யெழுத்து மிகும்(இரட்டிக்கும்) 'வாழை' என்ற நிலைமொழியோடு 'பழம்' என்ற வருமொழி சேரும் போது 'வாழைப் பழம்' என்ருகும். 'ப' என்ற உயிர்மெய்யில் 'ப்' என்ற மெய் மிகுந்தது. (இதை 'வலி மிகுதல்' என்பர்.) 'வாழைபழம்' என்றெழுதுவது பிழையாகும்.

வல்லின மெய்யெழுத்துகள் ஆறு. (க்,ச்,ட்,த்,ப்,ற்). இவற்றுள் 'க்,ச்,த்,ப்' என்ற நான்கு வல்லின மெய்களே உயிரெழுத்துகளோடு சேர்ந்து வல்லின உயிர்மெய்யெழுத்தாகி வருமொழி முதலெழுத்தாக வரும். ஆகவே அந்நான்கு வல்லின மெய்கள்மட்டுமே மிகும். அதைக் குறிக்க, எழுதும்போது, வருமொழி முதலிலுள்ள மெய்யை மீண்டும் ஒன்றிணைத்து எழுதுவர். தமிழ்ச் சொல்லில் முதலெழுத்தாக 'ட்,ற் என்ற வல்லெழுத்துகள் வருவதில்லை. ஆகவே இவ்விரு எழுத்துகள் மிகுவதில்லை! மிகும் வாய்ப்பும் இல்லையன்ருே?

வலிமிகுதல், வல்லினம் மிகுதல், ஒற்றுமிகுதல் என்றால் என்ன? நிலைமொழிக்குப் பின் வந்து சேரும் வருமொழியின் முதலெழுத்து வல்லின எழுத்தாக இருக்கும் போது, சில இடங்களில் அது மிகுந்து வரும் சான்று: அந்த + கனி = அந்தக்கனி. கனி என்பது வருமொழி. வருமொழியின் முதலெழுத்து 'க' என்ற வல்லினமாகும். அது மிகுந்த தால் 'க்' என்ற ஒற்று–மெய்–எழுத்து வந்தது. [க்க, ச்ச, த்த, ப்ப என வருதலை மிகுதல் என்பர். அக்கடல், இப்புத்தகம், பிள்ளைத்தமிழ், முல்லைச்சிரிப்பு]

குறிப்பிட்ட சிலவிடங்களில் வல்லெழுத்து மிகும்; சிலவிடங்களில் மிகாது; இயல்பாகப் புணரும்.

எவ்வெவ்விடங்களில் வலிமிகும் என்பதை இங்குக் காண்போம்:–

(தொடரும்)

இந்தியாவில் கல்வித்துறை
(1966-ஆம் ஆண்டுக் கணக்குப்படி)

இந்தியாவில் இப்பொழுது உள்ள ....

○ தொடக்கப் பள்ளிகள்: 4.00,000
அவற்றில் உள்ள ஆசிரியர்கள்: 105 இலக்கம் பேர்
அவற்றில் படிக்கும் மாணவர்கள்: 511 இலக்கம் பேர்

○ நடுத்தரப் பள்ளிகள்: 78,000
அவற்றில் உள்ள ஆசிரியர்கள்: 5,20 000
அவற்றில் படிக்கும் மாணவர்கள்: 110.33 இலக்கம் பேர்

○ உயர்நிலைப் பள்ளிகள்: 26 000.
அவற்றில் பெண்களுக்கு மட்டும்: 8,000
அவற்றில் உள்ள ஆசிரியர்கள்: 4,40,000
அவற்றில் படிக்கும் மாணவர்கள்: 51.4 இலக்கம் பேர்

○ கல்லூரிகள் [ஆண்களுக்கு] 950.
கல்லூரிகள் [பெண்களுக்கு] 750
இவற்றில் உள்ள ஆசிரியர்கள்: 50,000 பேர்
இவற்றில் படிக்கும் மொத்த மாணவ மாணவிகள்: 10 இலக்கம் பேர்

○ தொழில் கல்லூரிகள் (ஆண்களுக்கு) 1300.
,, ,, [பெண்களுக்கு] 150.
இவற்றில் பயிலும் மாணவர்கள்: 4,00;000 பேர்

○ இந்தியாவில் உள்ள மொத்த பல்கலைக் கழகங்கள்: 64.

○ இந்தியாவில் கல்விக்காக ஓர் ஆண்டுக்குச் செலவிடப்படும் தொகை: 379.75 கோடி உருபா

பழைய கதை: புதிய முடிவு

காகமும் நரியும்.

—மு. திருவேங்கடசாமி.

ஒரு காகம் ஒரு கடையிலிருந்து ஒரு வடையைத் தூக்கிக் கொண்டு பறந்து சென்று ஒரு மரத்தில் உட்கார்ந்தது. அந்தப் பக்கம் ஒரு நரி வந்தது. நரி மரத்திலிருந்த காகத்தைப் பார்த்தது. காகத்தின் வாயிலிருந்த வடையையும் பார்த்தது.

காகத்தை ஏமாற்றி அந்த வடையைப் பறித்துக் கொள்ள எண்ணியது நரி. நரி சூழ்ச்சியான விலங்கு. அது தன் ஏமாற்று வேலையைக் காகத்திடம் காட்டத் தொடங்கியது.

நரி காகத்தைப் பார்த்து, ''ஓ, காகமே! நீ நன்ருகப் பாடுவாயாமே; எனக்குப் பாட்டு என்ருல் மிகப் பிடிக்கும். எங்கே ஒருபாட்டு பாடு கேட்கலாம்'' என்று சொன்னது. நரியின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்ட காகம் தன் வாயிலிருந்த வடையை எடுத்துத் தன் கால்களில் வைத்து நன்ருக அழுத்திக் கொண்டு 'கா,கா' என்று பாடியது.

நரி எதிர் பார்த்தபடி வடை கீழே விழவில்லை. அடுத்து வேருெரு சூழ்ச்சி செய்தது. ''காக்கா, காக்கா, நீ ஆட்டமும் ஆடுவாயாமே; எனக்கு ஆட்டம் என்ருல் மிக மிகப் பிடிக்கும்; எங்கே ஓர் ஆட்டம் ஆடு பார்க்கலாம்,'' என்று நரி கூறியது.

காகம் வடையை மறுபடியும் வாயில் கௌவிக் கொண்டு, அடியெடுத்துத் தை, தை என்று மரக்கிளையின் மீது ஆடியது. இந்த முறையும்நரி எதிர் பார்த்தது நடக்க வில்லை. கடைசியாக நரி பெரிய சூழ்ச்சி செய்தது.

''காக்கா, காக்கா உன் ஆட்டமும் பாட்டமும் நன்ருக இருந்தன. ஆனுல், அவை இரண்டும் ஒரே நேரத்தில் சேர்ந்து இருந்தால் இன்னும் எவ்வளவு அழகாக இருக்கும் தெரியுமா? எங்கே, பாடிக் கொண்டே ஆடு பார்க்கலாம்,'' என்று நரி புகழ்ந்து பேசியது.

காகமும் அதற்கிசைந்து நரியைச் சிறிது நேரம் பொறுத்திருக்கச் சொல்லி, வடையைத் தின்னத் தொடங்கியது. நரியும் ஏமாற்றம் அடைந்து நடையைக் கட்டியது.

அறிஞர்களும் பூனைகளும்

1 "சர் வால்டர் இசு காட்டு", "பூனை கடல்போல் பெருமிதமானது. அதன் எண்ணங்கள் நம் இணைப்பதற்குக் [ஒப்பிடுவதற்குக்] கூட இயலாத அளவு வியப்பானவை" என்கிறார்.

2 "சர் காம்பசு மெகம்சி" என்பவர் எப்பொழுதும் பத்து இருபதென்று பூனைகளை வளர்த்து வந்தாராம்.

3 "பெர்னுட்சா" "எந்தப் பூனையைப் பார்த்தாலும் அதன் பட்டுடலை ஒரு முறையேனும் தடவிக் கொடுக்காமல் இருந்ததில்லை" என்று கூறுகிறார்.

4 "என்றி சேம்சு" என்ற எழுத்தாளர், பூனையைத் தோள் மேல் ஏற்றிக் கொண்டுதான் எழுதுவாராம்.

5 "சார்லசு திக்கன்சு" ஒரு செவிட்டுப் பூனையை அருகில்வைத்துக் கொண்டுதான் எழுதுவாராம்.

6 மருத்துவர் "சான்சன்" கடை வீதிக்குச் செல்லும் பொழுது பூனையைத் தோளின் மேல் வைத்துக் கொண்டுதான் செல்வாராம்.

7 பிரஞ்சுப் பாவலரும் புதின [நாவல்] ஆசிரியருமான ஒருவர் வீடு நிறையப் பூனைச் செல்வங்கள் தானும். அவர் மடியில் பூனையில்லாமல் அவரால் எழுத முடியாதாம்.

8 எழுத்தாளர் "தாமசு ஆர்டி"க்குத் தம் வளர்ப்புப் பூனையின் 'மியாவ்" ஒலி தேனுக ஒலிக்குமாம்.

9 "வின்ச்டன் சர்சிலு"க்குப் பூனையென்றால் அளவற்ற விருப்பமாம். தன் பூனையான "நெல்சனை" "என் அன்பே!" என்றுதான் அழைப்பாராம். "போர்க் காலத்தில் வெந்நீர் புட்டி போல் எனக்கு இது" என்று நண்பர்களிடம் அந்தப் பூனையை அறிமுகம் செய்வார்.

10 உலகப் பூனைகளிலேயே மிகச் சிறந்ததாகக் கருதப் பட்டது 1909 பிப்ரவரியிலிருந்து 1929 சனவரி வரையில் [இறக்கும்வரை] "பிரிட்டிசு பொருட்காட்சிச்சாலை"யைக் காவல் காத்து வந்த "மைக்" என்ற பூனை.

(செய்தி:- இரா.வ. சனார்த்தனம், பள்ளி நேலியனூர்.)

சென்ற மாதப் புதிரின் விடை:

விடை: 50 வாயிற் படிகளிலும் உள்ள காவலர்களுக்குப் பாரியும் ஓரியும் ஆளுக்கொரு பழம் மேனி கொடுத்து வந்தனர். 50 - ஆவது வாயிற்படி யண்டை வருகையில் இருவர் மூட்டைகளிலும் 50,50 பழங்கள் இருக்கும். அவற்றை ஒரே மூட்டையாகக் கட்டிக் கொண்டு மீதமுள்ள 50 காவற் காரர்களுக்கும் 50 பழங்களைக் கொடுத்தனர். மீதி உள்ள 50 பழங்களை இருவரும் ஆளுக்கு 25 மேனி எடுத்துக் கொண்டனர்.

இப்புதிருக்கு ஏராளமான பேர் விடைகளை அனுப்பியிருந்தனர். விடைகளை இங்கு அனுப்ப வேண்டியதில்லை என்று நாம் முன் பே எழுதியுள்ளோம். இபபகுதியில் வரும் புதிர்களுக்குத் தக்க விடைகளை அன்பர்கள் தாங்களே கண்டு பிடித்து வைத்துக் கொண்டு, பின்னர் வரும் விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டுமேயன்றி, புதிருக்கான விடைகளை இங்கு அனுப்பத் தேவையில்லை என்று மீண்டும் கூறிக் கொள்கின்றோம்.

முன்மாதப் புதிரை எழுதிய இரா. வ. சனார்த்தனன் என்பவர்க்கு ஓராண்டுக்குத் தமிழ்ச்சிட்டு இலவசமாக விடுக்கப் பெறும்.

இம்மாதப் புதிர்:

வளவன் சனவரி மாதத்தில் தன் கையில் உள்ள ஒரு தொகையை ஒரு வங்கியில் போட்டார். அவ்வாண்டு திசம்பரில் அத்தொகைக்கு உருபா 7 வட்டி கிடைத்தது. அடுத்த ஆண்டு பிப்ரவரியில் வளவன் தன் கணக்கில் உள்ள தொகையில் முதல் முறைபாக மூன்றில் ஒரு பங்குப் பணத்தை வங்கியிலிருந்து எடுத்துக் கொண்டார். அதன் பின், மீண்டும் ஏப்ரல் மாதத்தில் பிப்ரவரியில் எடுத்த தொகையில் மூன்றில் ஒரு பங்கை எடுத்தார். அதன்பின் சூலை மாதத்தில் ஏப்ரலில் எடுத்த தொகையில் மூன்றில் ஒரு பங்கை எடுத்தார். மீண்டும் நவம்பர் மாதத்தில் நான்காம் முறைபாக சூலை மாதம் எடுத்த தொகையில் மூன்றில் ஒரு பங்குத் தொகையை எடுத்தார். அந்த ஆண்டு இறுதியில் அவர் கணக்கில் முதலில் போட்ட தொகையில் பாதியும் உருபா 7 வட்டித் தொகையும் இருந்த தென்றால், வளவன் முதல் ஆண்டு சனவரியில் கட்டிய தொகை எவ்வளவு?

—இப்புதிரை எழுதியவர்:

--ச. அலெக்சாண்டர், 19,ஈசானி மூர்த்தி கோவில் தெரு, திருவொற்றியூர், சென்னை-19.

விடை அடுத்த இதழில்.

எங்கள் விருப்பம் என்ன?

O சிறுவர்களுக்கான சிறந்த அறிவு ஊட்டும் தமிழ்ச்சிட்டினை நடத்திவரும் தாங்கள் அதன் பக்கங்களை மிகுதிப்படுத்த வேண்டுகின்றோம். சுவை குன்றாத பகுதிகளைப் படித்துக் கொண்டு வரும் பொழுது திடீரென்று சிட்டுப் பறந்து விடுவது போல முடிந்து விடுகின்றது. படிக்கப் படிக்கப் பக்கங்கள் வளர்ந்து கொண்டே இருக்கக் கூடாதா என்ற ஓர் எண்ணம் எங்களுக்கு எல்லாம் ஏற்படுகின்றது. எனவே அருள் செய்து சிட்டுவின் பக்கங்களைச் சிறிது கூட்டிப் போடுமாறு தாழ்மையுடன் கோருகின்றோம். தமிழ்ச்சிட்டால் நாங்கள் சிறந்த பயனைப் பெற்று இருக்கின்றோம்.

—மாணவ மாணவியர், ஊராட்சி ஒன்றிப்பு அடிப்படைப் பள்ளி,
தேவம்பாளையம், பழங்கரை.

O தமிழ்ச்சிறார் பிஞ்சு நெஞ்சங்களிலே தனித்தமிழைத் தேனினும் இனிய வகையில் புகட்டிப் பதித்துப் பிழையின்றிக் கற்கவும், பேசவும், நல்லாசிரியர் போல் துணை நிற்கும் 'தமிழ்ச்சிட்டின்' தமிழ்ப் பணி போற்றுதற்குரியது. கடந்த சிட்டில் வந்த 'அறிவு வேளாண்மை' போன்றவற்றை இதழ்தோறும் எழுதுங்கள். விரைவில் கிழமை இதழாக மாற்றுங்கள்!

—இமயன், 154.சித்தார்த்த நகர்
பெங்களூர்—2

O "தமிழ்ச்சிட்டில் திருக்குறள் பகுதி ஒன்றைத் தொடங்கித் திங்களுக்கு ஓர் அதிகாரம் மேனி கருத்துடன் விளக்கி எழுத வேண்டுகிறேன்.

-மா.வே. இளவல், தொண்டு நிலையம், சீராமபுரம் பெங்களூர்-21.

O தமிழ்ச்சிட்டில் மாதம் ஒரு குறளும் அதற்கு விளக்கமான ஒரு சிறு கதையும் இணைத்தல் நலமென நினைக்கின்றேன். செய்வீர்களா?.

—இரா. அவிளுசியப்பன், 11-ம் நிலை, அ.உ.பள்ளி, பெருந்தொழுவு,
கோவை. மா. வ.

O ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றைத் தொடர்ந்து தமிழ்ச்சிட்டில் வெளியிட்டால் என்போன்ற இளஞ் சிறுவர்களுக்கு மிக்க நன்மை பயக்கும் என்று எண்ணுகிறேன்.

வெளியிடுவீர்களா?

—ம.பொன்அரசு, ஏழாம்நிலை, சரசுவதி உயர் தொடக்கப் பள்ளி,
அமரன்பதி.

பயன் மொழிகள்!

வள்ளு வரின் நூலே–நல்ல
வழி யளிக்கும் தம்பி !
குள்ளர் வழிச் சென்று-நீ
குழியில் விழ வேண்டா.
உள்ள இனத் தார்கள்–உளம்
ஒன்று பட வேண்டும்.
தள்ளுக 'பொ ருமை'–ஒரு
தாய் வயிற்று மக்கள்!

நீக்குக பே ராவல்–தம்பி
நிகர் எவரும் ஆவார்.
போக்கு சினம், தீச்சொல்–நீ
பொன் அறத்தை வாழ்த்து !
சேர்க்கும் அறம் உன்னே–ஒரு
தீங்கும் அற்ற வாழ்வில்.
ஊர்க் குழைக்க வேண்டும்-நீ
உண்மை யுடன் தம்பி!

நாட்டுக் குழை தம்பி–இந்த
நானி லத்தை எண்ணி!
வீட்டுக் குழை தம்பி-இங்கு
மீதிப் பெயர் எண்ணி!
தோட்டம் பொது தம்பி-இந்தச்
சீமை பொது தம்பி!

சொத்து வரும் என்று-நீ
தோது தவ ருதே!
முத்து வரும் என்று-நீ
முறை தவற வேண்டா,

(பாரதிதாசன் 'ஏற்றப் பாட்டு')

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1